ISSN 2279-3607

# கூர்மை

## பொருளியல் அரையாண்டுச் சஞ்சிகை




Source: Adapted from Bourguignon (2004) and self developed.

பொருளியல் துறை
வணிக முகாமைத்துவ பீடம்
கிழக்குப்பல்கலைக்கழகம்
இலங்கை

**Adviser**

Dr.T.Bhavan
Head
Department of Economics,
Eastern University, Sri Lanka

**Editor**

Mrs.S.Maheswaranathan
Senior Lecturer,
Department of Economics,
Eastern University, Sri Lanka

**Editorial Team**

Mr.S.Jayarajah
Senior Lecturer,
Department of Economics,
Eastern University, Sri Lanka

Mr.A.Soundralingam
Senior Lecturer,
Department of Economics,
Eastern University, Sri Lanka

Mr.K.Pushpakaran
Senior Lecturer,
Department of Economics,
Eastern University, Sri Lanka

Mrs. J.Suresh
Senior Lecturer,
Department of Economics,
Eastern University, Sri Lanka

**Contact Address**

Editor
Coormai,
Department of Economics
Faculty of Commerce and Management
EUSL

Telephone No: 065 2240735

கூர்மையின் வாசகர்களே.......

கிழக்குப்பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடத்தின் பொருளியல் துறையினால் வெளியிடப்படும் கூர்மை சஞ்சிகையின் இருபதாவது இதழினை உங்கள் கரங்களில் தவழவிடுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்களின் பரீட்சையை நோக்காக கொண்டு பல விடங்களை தாங்கிய சிறப்பு இதழாக கூர்மை வெளிவந்து கொண்டிருக்கின்றது. இது பொருளியலை ஒருபாடமாகக் கற்கும் மாணவர்களுக்கு மாத்திரமன்றி பொருளியலைக் கற்பிக்கும் ஆசியர்களுக்கும் நன்மை பயக்கும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

கூர்மை பற்றிய தங்களின் மேலான கண்ணோட்டத்தை வாசகர்களாகிய உங்களிடமிருந்து எதிர்பார்ப்பதோடு எதிர்வரும் காலங்களிலும் கூர்மையானது வெளிவருவதற்கு தங்கள் ஆதரவினை வேண்டிநிற்கின்றேன்.

நன்றி

ஆசிரியர்
கூர்மை

# தேசிய உற்பத்திக் கணிப்பீடு - சில எண்ணக்கருக்கள்

## (National Income Accounting –Some Concepts)

**திரு.அ.சௌந்தரலிங்கம்**
**சிரேஸ்ட விரிவுரையாளர்,**
**பொருளியல் துறை,**
**கிழக்குப்பல்கலைக்கழகம்**

### மொத்த உள்நாட்டு உற்பத்தி இடைவெளி (GDP Gap)

பேரினப் பொருளியலில் இடம் பெறுகின்ற ஒரு முக்கியத்துவம் வாய்ந்த விடயமாக தேசிய உற்பத்திக் கணிப்பீடு காணப்படுகின்றது. தேசிய உற்பத்திக் கணிப்பீடானது பொதுவாக மூன்று அடிப்படைகளில் இடம்பெறுகின்றது. அவையாவன, உற்பத்தி அடிப்படையிலான கணிப்பீடு, வருமானம் அடிப்படையிலான கணிப்பீடு, செலவீட்டின் அடிப்படையிலான கணிப்பீடு என்பனவாகும். மேற்கூறிய எந்த அடிப்படையில் தேசிய உற்பத்தியைக் கணிப்பீடு செய்யும் போதும் முதலில் மொத்த உள்நாட்டு உற்பத்தியே (GDP) பெற்றுக் கொள்ளப்படுகின்றது. அந்தவகையில் GDP என்பது தேசிய உற்பத்திக் கணிப்பீட்டில் பிரதான பாத்திரத்தினை வகிக்கின்றது. அத்தகைய GDP என்ற எண்ணக்கருவுடன் தொடர்பான ஒரு விடயமே மொத்த உள்நாட்டு உற்பத்தி இடைவெளி என்பதாகும்.

### உண்மை GDP- சாத்தியவள GDP

மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பதை அண்மைக்காலங்களில் பொருளியலாளர்கள் இரண்டு விதமாக நோக்குகிறார்கள்.

- உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி (Actual Gross National Product)
- சாத்தியவள மொத்த உள்நாட்டு உற்பத்தி (Potential Gross National Product)

இவை இரண்டுக்குமிடையேயான வேறுபாட்டினை அடிப்படையாகக் கொண்டு GDP இடைவெளியை மதிப்பிட்டுக் கொள்கிறார்கள்.

உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது பொருளாதாரத்தில் இடம்பெற்ற அதாவது உற்பத்தி செய்து முடிக்கப்பட்ட வெளியீட்டின் அளவைக் குறித்து நிற்கின்றது. ஆனால் சாத்திய வள மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது பொருளாதாரத்தில் காணப்படும் நிலம், ஊழியம், உற்பத்தி இயலளவு ஆகிய அனைத்து மூலவளங்களும் அவற்றின் சாதாரண பயன்பாட்டு மட்டத்தில் பயன்படுத்தப்பட்ட நிலையில் எந்த அளவிற்கு உற்பத்தி இடம் பெற்றிருக்க முடியுமோ அந்தளவு உள்நாட்டு உற்பத்தியை குறித்து நிற்கின்றது. இதனை சாத்திய வள வருமானம் எனவும், நிறை தொழில் மட்ட வருமானம் எனவும், உயர் வேலைவாய்ப்பு வருமானம் எனவும் அழைக்கலாம். உண்மை GDP என்பதனை Y என்ற குறியீட்டினாலும், சாத்திய வள GDP என்பதனை Y* என்ற குறியீட்டினாலும் குறிப்பிட்டுக் காட்டலாம்.

**<u>GDP இடைவெளி – விளக்கம்</u>**

பொருளாதாரத்தில் உண்மையாக இடம்பெற்ற மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் சாத்தியவள மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் இடையேயான வேறுபாடே மொத்த உள்நாட்டு உற்பத்தி இடைவெளியாகும். ஒரு பொருளாதாரத்தின் அனைத்து வளங்களும் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டால் பெற்றிருக்கக்கூடிய முழு அளவிலான உள்நாட்டு உற்பத்திக்கும் (Y*), குறிப்பிட்ட பொருளாதாரத்தில் உண்மையில் இடம்பெற்றிருக்கும் முழு அளவிலான உள்நாட்டு உற்பத்திக்கும் (Y ), இடையிலான வேறுபாடே GDP இடைவெளி என்று அழைக்கப்படும். இதனை வெளியீட்டு இடைவெளி (Output gap) என்றும் அழைப்பர். Y-Y* என்பதாக அதன் கணிப்பீடு அமையும்.

**<u>தேக்க இடைவெளி (Recessionary gap)</u>**

சாத்தியவள GDP ஆனது (Y*), உண்மை GDP (Y) என்பதனை விட மிகையாகக்காணப்படும் போது அங்கு ஏற்படும் இடைவெளியானது அப் பொருளாதாரம் தனது மூலவளங்களை முற்றாகப்பயன்படுத்தி உற்பத்தி செய்யக்கூடியதாக இருந்தும் உற்பத்தி செய்ய முடியாமல் போன பொருட்கள் சேவைகளின் பெறுமதியைக் குறித்துநிற்கின்றது. எனவே அந்த Y* மட்டத்துக்கு கீழாக, அதாவது சாத்திய வள GDP க்கு கீழாக தனது உற்பத்தியை செய்து கொண்டிருப்பது பொருளாதாரத்திற்கு பெரும் பேரிழப்பாக அமைந்து விடுகின்றது. ஏனெனில் பயன்படுத்தக்கூடிய வளங்கள் பயன்படுத்தப்படாமல் இருப்பதால் இந்த இழப்பு ஏற்படுகின்றது. எனவே இதனை வேலையின்மையின் விளைவாக ஏற்படும் ஈடுசெய்ய முடியாத இழப்பு (Dead weight loss) என்று கூறுவர். பொருளாதாரமானது தனது சாத்திய வள வெளியீட்டுக்கு குறைவான நிலையில் இயங்கும் போது (Y<Y*) அங்கு எதிர்க்கணிய வெளியீட்டு இடைவெளி ஏற்படும். இதனை தேக்க இடைவெளி எனவும் அழைப்பர்.

**<u>வீக்க இடைவெளி (Inflationary gap)</u>**

பொருளாதாரத்தில் எழுச்சி நிலை (Boom) காணப்படும் போது உண்மை GDP என்பது சாத்தியவள GDP யினை விட மேலதிகமாகக் காணப்படும் (Y>Y*). அப்போது வெளியீட்டு இடைவெளி நேர்க்கணியமாகக் காணப்படும். சாத்திய வள வெளியீடு எனும் போது அங்கு உள்ளீடுகள் அதாவது வளங்கள் சாதாரண வீதத்திலேயே (Normal rate) பயன்படுத்தப்படுவதாக எடுத்துக் கொள்ளப்படும். ஆனால் எழுச்சிக்காலத்தில் அவை தற்காலிகமாக சாதாரண வீதத்திற்கு மேலான – உயர்ந்த வீதத்தில் பயன்படுத்தப்படலாம். உதாரணமாக தொழிலாளர்கள் மேலதிக வேலை நேரத்தில் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படலாம். இதனால் உண்மை GDP யானது சாத்தியவள GDP யினை விட அதிகரித்துக் காணப்படலாம். ஆனால் இது ஒரு தற்காலிக நிகழ்வாகவே காணப்படும்.

உண்மை GDP என்பது சாத்தியவள GDP யினை விஞ்சும்போது (Y>Y*), அங்கு விலைமட்டமானது உயர வாய்ப்பு ஏற்படும். இதனால் அந்த நேர்க்கணிய வெளியீட்டு இடைவெளியானது வீக்க இடைவெளி (Inflationary Gap)என்று அழைக்கப்படும்.

**கூட்டப்பட்ட பெறுமதி எண்ணக்கரு (Concept of Value Added)**

பொருளாதாரத்தில் உற்பத்தியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் ஒவ்வொரு தொழிலினதும் அல்லது நிறுவனத்தினதும் கூட்டப்பட்ட பெறுமதிகளை (Value Added) கூட்டுவதன் மூலம் தேசிய உற்பத்தியை நாம் கணிப்பீடு செய்து கொள்கின்றோம். தேசிய உற்பத்தியை மதிப்பீடு செய்யப்பயன்படுத்தப்படும் ஒரு நியம அளவீட்டு முறையாக இது காணப்படுகின்றது. இவ்வாறு கூட்டப்பட்ட பெறுமதி அடிப்படையில் அளவீட்டினை மேற்கொள்ளும்போதுதான் தேசிய உற்பத்தியானது தேசிய வருமானத்திற்கும் மறுபுறம் தேசிய செலவீட்டிற்கும் சமமானதாக அமைய முடியும். தேசிய உற்பத்திக்கணிப்பீட்டின் சரியான தன்மையும் உறுதிப்படுத்தப்படும்.

**இரட்டைக்கணிப்பீட்டுப் பிரச்சினை**

தேசிய உற்பத்தி என்பது ஒரு பொருளாதாரத்தில் தனிநபர்கள், நிறுவனங்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்கள் என்பவற்றினால் உற்பத்தி செய்யப்படும் எல்லா வெளியீடுகளினதும் கூட்டுத் தெகையுடன் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. பொருளாதாரத்தில் காணப்படும் ஒவ்வொரு உற்பத்தி நிறுவனங்களும் உற்பத்தி செய்யும் எல்லா வெளியீட்டுப் பெறுமதிகளையும் வெறுமனே கூட்டுவதன்மூலம் தேசிய உற்பத்தியைப் பெற்றுக் கொள்ளலாம் என்று நினைப்பது தவறானதாகும். காரணம், ஒரு பொருளாதாரத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு நிறுவனத்தின் வெளியீடானது இன்னொரு நிறுவனத்திற்கு உள்ளீடாகச் செல்லும் நிலைமையானது பொருளாதாரங்களிலே காணப்படுகிறது. இவ்வாறு பல நிறுவனங்களின் வெளியீடுகள் உள்ளீடுகளாக ஏனைய நிறுவனங்களுக்குச் செல்லுகின்றன.

உதாரணமாக ஒரு சேட் தயாரிக்கும் நிறுவனம் அதற்குத் தேவையான உள்ளீடுகளான துணி, நூல்கள், பொத்தான்கள் போன்றவற்றை வேறு நிறுவனங்களில் இருந்து பெற்றுக் கொள்கின்றது. அத்தகைய உள்ளீடுகளானவை ஏனைய நிறுவனங்களைப் பொறுத்தவரை அவற்றின் வெளியீடுகளாகவே அமைகின்றன. இந்நிலையில் நாம் வெறுமனே எல்லா நிறுவனங்களின் வெளியீடுகளையும் ஒன்று சேர்த்துக் கூட்டும்போது அது அப் பொருளாதாரத்தின் உண்மை வெளியீட்டை விடக் கூடிய பெறுமதியைக்காட்டி விடும். இவ்வாறு தனி நிறுவனங்களின் விற்பனைப் பெறுமதிகளைக்கூட்டி நாட்டின் மொத்த உற்பத்தியை அறிய முற்படும் போது அங்கு இரட்டைக் கணிப்பிடல் எனும் தவறு ஏற்பட்டு விடுகிறது. அதாவது எல்லா நிறுவனங்களினதும் விற்பனைப் பெறுமதிகளை ஒன்று சேர்த்து கூட்டும் போது நிறுவனங்களின் வெளியீட்டுப் பெறுமதிகள் மீண்டும் மீண்டும் அங்கு சேர்த்துக் கொள்ளப்படுகின்றன.

**இரட்டைக்கணிப்பீட்டுப்பிரச்சனை - ஒரு தீர்வு**

இந்த நிலையில் நிறுவனங்கள் மேற்கொள்ளும் வெளியீட்டை இரண்டு பிரிவுகளாக வேறுபடுத்தி நோக்கினால் இரட்டைக்கணிப்பீட்டுப் பிரச்சினையை தீர்த்துக்கொள்ளலாம்.

- குறிப்பிட்ட காலப்பகுதியில் ஏனைய நிறுவனங்களுக்கு உள்ளீடாகச் செல்லும் தன்மைகொண்ட இடைநிலைப் பொருட்கள் சேவைகளின் வெளியீடுகளைத் தனித்தனியாக வேறுபடுத்தி அளவீடு செய்து கொள்ளுதல்.
- குறிப்பிட்ட காலப்பகுதியில் ஏனைய நிறுவனங்களுக்கு உள்ளீடாகச் செல்லாத தன்மை கொண்ட இறுதிப் பொருட்கள் சேவைகளின் வெளியீடுகளைத் தனியாக வேறுபடுத்தி அளவீடு செய்து கொள்ளுதல்.

நிறுவனங்களின் விற்பனைப் பெறுமதியை இவ்வாறு முடிவுப் பொருட்களின் விற்பனை, இடைநிலைப் பொருட்களின் விற்பனை என்று தனியாகப் பிரித்து நோக்க முடியுமாயின் இரட்டைக்கணிப்பீடு இன்றி தேசிய வருமானத்தை நேரடியாக மதிப்பீடு செய்து விட முடியும். அதாவது எல்லா நிறுவனங்களினதும் இறுதிப்பொருட்கள் சேவைகளின் பெறுமதியில் இருந்து எல்லா இடைநிலைப் பொருட்கள் சேவைகளின் பெறுமதியைக் கழிப்பதன் மூலம் இரட்டைக்கணிப்பைத் தவிர்த்து தேசிய உற்பத்திக் கணிப்பீட்டை மேற்கொள்ளலாம்.

ஆனால் நடைமுறையில் இவ்வாறு இரண்டு பிரிவுகளாகப்பிரித்து கணிப்பீட்டை செய்வது இயலாத காரியம். ஏனெனில் குறிப்பிட்ட ஒரு பொருளை ஒரு நிறுவனம் உற்பத்தி செய்யும்போது அது முடிவுப் பொருளாகப் பயன்படச் செல்கிறதா அல்லது இடைநிலைப் பொருளாகப் பயன்படச்செல்கிறதா என்று தெரிந்திருக்க வேண்டிய அவசியமோ தேவையோ அதற்கு இல்லை. எனவே இப்பிரச்சினையை தீர்க்க மற்றொரு முறை பயன்படுத்தப்படுகின்றது. அதுவே கூட்டப்பட்ட பெறுமதி எண்ணக்கரு (Concept of Value Added)என்று அழைக்கப்பட்டு வருகின்றது.

**கூட்டப்பட்ட பெறுமதி - விளக்கம்**

பொருளாதாரத்தில் காணப்படும் ஒவ்வொரு நிறுவனத்தினதும் வெளியீட்டுப் பெறுமதியில் இருந்து அவை ஏனைய நிறுவனங்களில் இருந்து கொள்வனவு செய்த உள்ளீடுகளின் பெறுமதியை கழித்துப் பெறப்படுவது அந்நிறுவனங்களின் கூட்டப்பட்ட பெறுமதியாகும்.

உதாரணமாக ஒரு தளபாடத் தொழிற்சாலையின் கூட்டப்பட்ட பெறுமதி என்பது அதன் தளபாட வெளியீட்டின் மொத்த மதிப்பில் இருந்து அதன் உள்ளீடாகிய மரங்களின்

பெறுமதியை கழித்து வருதாகும். ஒரு பேக்கரியின் கூட்டப்பட்ட பெறுமதி என்பது அது உற்பத்தி செய்த பாண், கேக் என்பவற்றின் மொத்தப் பெறுமதியில் இருந்து அவற்றை

உற்பத்தி செய்யப்பயன்படுத்திய கோதுமைமா மற்றும் ஏனைய உள்ளீடுகளின் பெறுமதிகளை கழித்துப் பெறப்படுவதாகும். அவ்வாறு பார்க்கும் போது கூட்டப்பட்ட பெறுமதி என்பது ஒரு நிறுவனத்தின் மொத்த வெளியீட்டின் பெறுமதிக்கு அந்நிறுவனம் வழங்கிய சொந்தப் பங்களிப்பினை அளவிட்டுக் கூறுகின்றது. பின்வரும் அட்டவணை மூலம் கூட்டப்பட்ட பெறுமதி எனும் எண்ணக்கருவை மேலும் புரிந்து கொள்ளலாம்.

<u>உற்பத்திப் படிமுறையினூடாக கூட்டப்பட்ட பெறுமதி (ரூபாய்களில்)</u>

| | நிறுவனம் X | நிறுவனம் Y | நிறுவனம் Z | எல்லா நிறுவனங்களும் X+Y+Z |
|---|---|---|---|---|
| **A.** ஏனைய நிறுவனங்களிடம் இருந்து கொள்வனவு | 0 | 100 | 130 | = 230 நிறுவனங்களுக்கிடையே யான மொத்த விற்பனை |
| **B.** உற்பத்திக் காரணிகளின் கொள்வனவு (கூலி, வாடகை, வட்டி, இலாபம்) | 100 | 30 | 50 | = 180 கூட்டப்பட்ட பெறுமதி |
| **மொத்தம் A+B= உற்பத்திப் பெறுமதி** | 100 | 130 | 180 முடிவுப் பொருட்கள் சேவைகளின் பெறுமதி | = 410 எல்லா விற்பனைகளினதும் மொத்தப் பெறுமதி |

<u>அட்டவணையின் படி</u>

- X நிறுவனத்தின் உற்பத்திப் பெறுமதி = 100
- Y நிறுவனத்தின் உற்பத்திப் பெறுமதி = 130
- Z நிறுவனத்தின் உற்பத்திப் பெறுமதி = 180
- மூன்று நிறுவனங்களினதும் மொத்த விற்பனைப் பெறுமதி = 410

❖ மூன்று நிறுவனங்களினதும் மொத்த கூட்டப்பட்ட பெறுமதி = 180

**இதன்படி கூட்டப்பட்ட பெறுமதியை பின்வருமாறு கணிப்பிட்டு கொள்ளலாம்**

❖ X நிறுவனத்தின் உற்பத்திக்காரணிக் கொள்வனவு = 100

❖ Y நிறுவனத்தின் உற்பத்திக்காரணிக் கொள்வனவு = 30

❖ Z நிறுவனத்தின் உற்பத்திக்காரணிக் கொள்வனவு = 50

கூட்டப்பட்ட பெறுமதி = 180

**மற்றொரு வழியிலும் இதனை கணிப்பிடலாம்**

❖ மூன்று நிறுவனங்களினதும் மொத்த விற்பனைப் பெறுமதி = 410

❖ கழி: மொத்த நிறுவனங்களுக்கிடையேயான விற்பனை = 230

கூட்டப்பட்ட பெறுமதி = 180

**உயர்வலுப்பணம் (High powered Money)**

உயர்வலுப்பணம் என்பது நாடொன்றிலுள்ள பணக்கையிருப்பாகிய பணநிரம்பலுக்கு அடிப்படையாக அமையும் பணச்சொத்துக்களாகும். இது அடிப்படைப்பணம் (Base Money), அடித்தளப்பணம் (Monetory base), ஒதுக்குப்பணம் (Reserve Money) எனவும் அழைக்கப்படும்.

உயர்வலுப்பணமானது பொதுமக்களிடமும் வணிக வங்கிகளிடமுள்ள (புழக்கப்பணம்) தாள்குற்றி நாணயங்களையும் வணிக மத்திய வங்கியில் பேணிச்செல்லும் வைப்புக்களையும் உள்ளடக்கியதாகும்.

உயர் வலுப்பணத்தை நிர்ணயிக்கும் காரணிகளாக மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டு உள்நாட்டுச் சொத்துக்கள் அதாவது மத்திய வங்கி அரசாங்கத்துக்கு வழங்கியுள்ள தேறிய கடன் மற்றும் மத்திய வங்கி வணிக வங்கிக்கு வழங்கும் கடன்களையும் மத்திய வங்கியின் ஏனைய தேறிய சொத்துக்களும் காணப்படுகின்றன.

க.பொ.த. உயர்தர பொருளியல் கற்கும் மாணவர்களுக்கானது.

# கொள்கை வட்டி வீதங்கள்

## (Policy interest rates)

**திரு.ச.ஜெயராஜா**
**சிரேஸ்ட விரிவுரையாளர்,**
**பொருளியல் துறை,**
**கிழக்குப்பல்கலைக்கழகம்**

இலங்கை மத்திய வங்கியானது நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்தும் ஒரு நிறுவனமாகும். நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்த மத்திய வங்கி கையாளும் வட்டி வீதங்களே கொள்கை வட்டி வீதங்கள் எனப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கி மூன்று கொள்கை வட்டி வீதங்களை பயன்படுத்துகின்றது. ஒதுக்குப்பண இலக்குகளை அடைந்து கொள்வதற்கு மிகப் பிரதான கருவியாக மீள்கொள்வனவு வீதம், நேர்மாற்று மீள் கொள்வனவு வீதம் என்பன உள்ளன. பணச்சந்தையில் காணப்படும் கீழ் மற்றும் மேல் எல்லைகளாக இவ்வீதங்களே காணப்படுகின்றன.

01. மீள் கொள்வனவு வீதம் (Repo Rate)
02. நேர்மாற்று மீள் கொள்வனவு வீதம் (Reverse Repo Rate)
03. வங்கி வீதம் (Bank Rate)

மத்திய வங்கிக்கும் வணிக வங்கிகளுக்குமிடையிலான கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளின் போதே கொள்கை வட்டி வீதங்கள் பயன்படுத்தப்படுகின்றது. கொள்கை வட்டி வீதங்களை மாற்றிமைப்பதன் மூலம் பொருளாதார வட்டி வீதங்களில் தாக்கத்தினை ஏற்படுத்தலாம். கொள்கை வட்டி வீதங்கள் உயரும் போது பணச் சந்தை வட்டி வீதம் அதிகரிப்பதும் மாறாக கொள்கை வட்டி வீதங்கள் குறைவடையும் போது பணச்சந்தை வட்டி வீதங்கள் குறைவடைவதையும் அவதானிக்கலாம். பணச்சந்தை வட்டிவீதங்கள் மாற்றமடையும் போது மொத்தக் கேள்வியில் வட்டிவீதத்துடன் தொடர்புடைய மாறிகளிலும் தாக்கம் ஏற்படும். தனியார் முதலீடு, நெடுவாழ்வுப் பொருட்களின் நுகர்வு போன்றவற்றில் இதன் தாக்கம் காணப்படும். அதேபோல் பணச்சந்தை வட்டிவீதங்கள் மாற்றமடையும் போது சொத்து விலைகளும் மாற்றமடையும்.

### வட்டிவீதச் செல்வழி

இலங்கை மத்திய வங்கியானது மீள்கொள்வனவு வீதம் மற்றும் நேர் மாற்று மீள் கொள்வனவு வீதம் என்பவற்றின் அடிப்படையில் பணச்சந்தையின் வட்டிவீதச் செல்வழி ஒன்றினை ஏற்படுத்துகின்றது. மீள் கொள்வனவு வீதம் இதன் கீழ் எல்லையாகவும், நேர் மாற்று மீள் கொள்வனவு வீதம் அச் செல்வழியின் மேல் எல்லையாகவும் காணப்படும்.

### மீள் கொள்வனவு வீதம் (Repo Rate)

மீள் கொள்வனவு வீதம் என்பது துணைநில் வசதிகளின் கீழ் வர்த்தக வங்கிகள் மத்திய வங்கியுடனான மீள் கொள்வனவுக்கான நடவடிக்கைகளின் போது ஓர் இரவு அடிப்படையில் பிரயோகிக்கத்தக்க வட்டி வீதமாகும்.

இணங்கிய ஒரு தினத்தில் இணங்கிய ஒரு வட்டி வீதத்தில் மீளக் கொள்வனவு செய்யப்படும் என்ற ஒப்பந்தத்துடன் முறிகளைக் கொள்வனவு செய்வது மீள் கொள்வனவு எனவும் அக் கொள்வனவிற்காக பயன்படுத்தப்படும் வட்டி வீதம் மீள்கொள்வனவு வீதம் எனவும் அழைக்கப்படும். மீள கொள்வனவு செய்யப்படும் என்ற ஒப்பந்தத்தின் கீழ் முறிகளை மத்திய வங்கி விற்பனை செய்வதனை இது குறிக்கும். இது வட்டிவீத செல்வழியின் கீழ் எல்லையாகும்.

பணச் சந்தையில் மேலதிக திரவத்தன்மை இருக்கும் போது மீள் கொள்வனவு நடவடிக்கைகள் மூலம் திரவத்தன்மை உறிஞ்சப்படுகின்றது.

**நேர்மாற்று மீள் கொள்வனவு வீதம்**

நேர்மாற்று மீள் கொள்வனவு வீதம் என்பது துணைநில் வசதிகளின் கீழ் வர்த்தக வங்கிகள் மத்தியவங்கியுடனான நேர்மாற்று மீள் கொள்வனவுக்கான நடவடிக்கையின் போது ஓர் இரவு அடிப்படையில் பிரயோகிக்கக்கூடிய வட்டிவீதமாகும்.

இணங்கிய ஒரு தினத்தில் இணங்கிய ஒரு வட்டி வீதத்தில் மீளக் கொள்வனவு செய்யப்படும் என்ற ஒப்பந்தத்துடன் முறிகளைக் விற்பனை செய்வது நேர்மாற்று மீள் கொள்வனவு எனவும் அக் கொள்வனவிற்காக பயன்படுத்தப்படும் வட்டி வீதம் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் எனவும் அழைக்கப்படும். மீள கொள்வனவு செய்யப்படும் என்ற ஒப்பந்தத்தின் கீழ் முறிகளை மத்திய வங்கி கொள்வனவு செய்வதனை இது குறிக்கும்.

பணச் சந்தையில் திரவத்தன்மை பற்றாக்குறையாக இருக்கும் போது நேர்மாற்று மீள் கொள்வனவு நடவடிக்கைகள் மூலம் திரவத்தன்மை உட்செலுத்தப்படும் பொருட்டு தினமும் ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இது வட்டிவீத செல்வழியின் மேல் எல்லையாகும்.

இணங்கிய ஒரு தினத்தில் இணங்கிய ஒரு வட்டி வீதத்தில் மீளக் கொள்வனவு செய்யப்படும் என்ற ஒப்பந்தத்துடன் முறிகளைக் விற்பனை செய்வது நேர்மாற்று மீள் கொள்வனவு எனவும் அக் கொள்வனவிற்காக பயன்படுத்தப்படும் வட்டி வீதம் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் எனவும் அழைக்கப்படும். மீள கொள்வனவு செய்யப்படும் என்ற ஒப்பந்தத்தின் கீழ் முறிகளை மத்திய வங்கி கொள்வனவு செய்வதனை இது குறிக்கும்.

பணச் சந்தையில் திரவத்தன்மை பற்றாக்குறையாக இருக்கும் போது நேர்மாற்று மீள் கொள்வனவு நடவடிக்கைகள் மூலம் திரவத்தன்மை உட்செலுத்தப்படும் பொருட்டு தினமும் ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இது வட்டிவீத செல்வழியின் மேல் எல்லையாகும்.

**வங்கி வீதம்**

வங்கி வீதம் என்பது வேறொரு கொள்கை வட்டி வீதம் ஆகும். இந்த வீதத்திலேயே மத்திய வங்கி வர்த்தக வங்கிகளுக்கு இறுதிக்கடன்களை வழங்குகின்றது. இவை பிணையிடப்பட்ட கடன்களாக இருப்பதுடன் அரச பிணையங்கள் பிணைகளாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. வங்கி வீதம் வழமையாக தண்ட வீதமாக இருப்பதுடன் இது மற்றைய சந்தை வீதங்களை விட உயர்வாகவே இருக்கிறது. ஆகவே, வர்த்தக வங்கிகள் மத்திய வங்கியிடமிருந்து வங்கி வீதத்திலும் பார்க்கக்

குறைவான வீதமான நேர்மாற்று மீள் கொள்வனவு வீதத்தில் கடன் பெற முடியுமாகையால் தற்பொழுது இவ் வீதம் வெறும் குறிகாட்டி வீதமாகவே இருந்து வருகின்றது.

**பணப்பெருக்கி (Money Multiplier)**

$1 மிகை ஒதுக்கினூடாக வங்கி முறைமூலம் (கடன்) உருவாக்கப்படும் வைப்புக்களின் எண்ணிக்கை பணப்பெருக்கியாகும்.

நாடொன்றில் பணநிரம்பல் அதன் உயர்வலுப்பணத்தை விட அதிகமாகும். ஏனெனில் வணிக வங்கிகள் உருவாக்கும் பணத்தினால் ஏற்படுவது பணநிரம்பலின் கூறாகிய கேள்வி வைப்புக்களில் உள்ளடக்கப்படுவதாகும்.

பணநிரம்பலுக்கும் உயர்வலுப்பணத்திற்கும் இடையிலான விகிதம் பணப் பெருக்கியாகும் (Money Muliplier).

உயர்வலுப்பணத்தினால் ஏற்படும் மாற்றத்தின் காரணமாக பணநிரம்பலில் ஏற்படும் மாற்றத்தினளவு பணப்பெருக்கியாக அளவிடப்படும். பணப் பெருக்கியின் அளவு ஒன்றுக்கு கூடியதாகக் காணப்படும். பணப்பெருக்கியானது பின்வருமாறு கணிப்பிடப்படுகின்றது.

பணப்பெருக்கி (m) = ms/H m – பணநிரம்பல், H – உயர்வலுப்பணம்

ms = m x H m > 1

$$\text{பணப்பெருக்கி} = \frac{1}{\text{ஒதுக்கப்பட்ட இயலளவு}}$$

**இலங்கை சுபீட்சச் சுட்டெண் 2009 - 2011**

| சுட்டெண்கள் | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|
| இலங்கை சுபீட்ச சுட்டெண் | 56.5 | 58.2 | **60.6** |
| பொருளாதாரம் மற்றும் வியாபாரச் சூழல் துணைச்சுட்டெண் | 66.0 | 67.4 | **70.1** |
| மக்கள் நல்வாழ்வுத் துணைச்சுட்டெண் | 52.5 | 54.4 | **56.4** |
| சமூக- பொருளதார உட்கட்டமைப்புத் துணைச்சுட்டெண் | 50.9 | 52.8 | **55.4** |

# வணிக வங்கிகளின் கடனாக்கம்

## (Credit Creation of Commercial Banks)

**திருமதி.சறோஜினி மகேஸ்வரநாதன்**
**சிரேஸ்ட விரிவுரையாளர்,**
**பொருளியல் துறை,**
**கிழக்குப்பல்கலைக்கழகம்**

வணிக வங்கிகள் என்பது பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்று நுகர்வுக்கான அல்லது முதலீட்டுக்கான கடன்களை வழங்கும் ஒரு நிதி நிறுவனமாகும். இவை கேள்வி வைப்புக்களினூடாக பணவாக்கத்தினை செய்வதன் மூலம் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்கின்றது. பணவாக்கம் என்பது வணிக வங்கிகள் தான் திரட்டும் வைப்புக்களில் குறித்த ஒரு சதவீதத்தை ஒதுக்காக வைத்துக்கொண்டு மீதியை கடனாக வழங்குவதையும் இவ்வாறு வழங்கப்படும் கடன் கேள்வி வைப்புக்களிடையே பரிமாற்றம் செய்யப்படுவதால் வங்கிக் கட்டமைப்பினுள் உள்வந்த ஆரம்ப வைப்பின் அளவை விட கூடிய பெறுமதியுடைய கொடுக்கல் வாங்கல்களை பூர்த்தி செய்யும் ஆற்றலை வழங்கும் கூட்டுச் செயற்பாடாகும். வங்கியால் பெறப்படும் பணமானது மற்றையவர்களுக்கு பயனளிக்கும் அதேவேளை வைப்பாளர் தனது பணத்திற்கு கேள்வி ஏற்படுத்தும் போது அதை நிவர்த்திசெய்யக் கூடியவாராக இருப்பின் வைப்பாளர் அதனால் திருப்தியடைவார். இதற்காக வங்கிகள் மிகச்சிறியளவு ஒதுக்குவீதத்தை பேணி வருகின்றது. அத்துடன் எல்லா வைப்பாளர்களும் ஒரே நேரத்தில் மீளப் பெறமாட்டார்கள். அதுமாத்திரமன்றி சிலர் மீளப் பெறும்போது சிலர் வைப்பிலிடுவார்கள். எனவே சிறுகாசு ஒதுக்குவீதம் மூலம் வங்கிகள் உயர் கடன் உருவாக்கத்திற்கு அடிப்படையானதாக அமைகின்றது.

இதே போல் வங்கிகள் பிணைகளை வாங்குவதோடு வியாபாரிக்கு தனது சொந்த காசோலையை பணத்திற்காக வழங்குகிறது. காசோலை வேறு வங்கியில் வைப்பிலிடுவதனால் அது ஒரு வைப்பை உருவாக்கும் அல்லது பிணை விற்பனை செய்பவருக்கான கடன் உருவாக்கப்படும். இது கடனாக்கமாகும். பணவாக்கத்தினை Benham's என்பவர் வாடிக்கையாளர் அவரது கணக்கிலிருந்து பணத்தை மீளப்பெற அனுமதிப்பதன் மூலம் வட்டியை பெறலாம் அல்லது பிணைகளை கொள்வனவு செய்து சொந்த காசோலைகளை வழங்குவதன் மூலமும் வங்கிகளின் மொத்த வைப்பினளவை அதிகரித்தல் எனக் குறிப்பிடுகின்றார்.

(உதாரணம்) ஒரு நாட்டில் ஒரு வங்கி மாத்திரம் உள்ளதென கருதிக்கொண்டு கடன் செயற்பாட்டை நோக்கின், ஒரு வைப்பாளர் ரூ 1000 ஐ வங்கியில் வைப்பிலிடுகிறார். வங்கி அவர்களுக்கு வட்டி வழங்கவேண்டும். அதேநேரம் வங்கி இப்பணத்தை பாதுகாத்துக் கொள்வதோடு இத்தொகைக்கான இலாபகரமான முதலீட்டையும் செய்ய வேண்டும். அதற்காக இத்தொகையில் குறிப்பிட்ட ஒரு பகுதி கடனாக ஏனையோருக்கு வழங்கப்படவேண்டும். வங்கிகளின் கடப்பாடுகளுக்கு அமைய அதாவது வைப்பாளருக்கு பணம் தேவைப்படும் போது அவர்களது தேவையை பூர்திசெய்வதற்காகவும் அல்லது

காசோலை வரைவதை நோக்காகக் கொண்டும் முழுத்தொகையும் வங்கியால் வழங்கப்படாது வங்கியாளனின் அனுபவத்தின்படி இதற்காக மொத்த தொகையில் குறிப்பிட்ட வீத காசு ஒதுக்கம் பேணப்படும். இது இங்கிலாந்து போன்ற வங்கி பழக்கவழக்கம் வளர்ச்சியடையந்த நாடுகளில் 10 வீதமாகவும் அதேநேரம் வங்கி பழக்கவழக்கம் இன்னும் வளர்ச்சியடையவேண்டிய இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் இது அதிகமாகவும் காணப்படுகின்றது.

ஒரு வங்கி, வைப்பாளர் ரூ.1000ஐ வைப்பிலிடும் போது 20% காசு ஒதுக்கை வைப்பாளரின் தேவைகளை திருப்திப்படுத்தும் நோக்கத்திற்காக ஒதுக்கி வைத்திருக்கும். இதன் கருத்து வங்கி ரூ 1000 பெற்றவுடன் இது ரூபா 5000 உழைப்பதற்கு முயற்சி செய்யும் (1/5 ஒதுக்கு பேணப்படும்). வியாபாரி ரூ.5000 கடனுக்கு வரும்போது இத்தொகைக்கு வங்கி அனுமதியளித்து இரவல் வழங்கும். இருந்தும் வங்கியிடம் ரூ.1000 மாத்திரமே உள்ளது. இக் கொடுக்கல் வாங்கல் சாத்தியமானது ஏனெனில் இரவலருக்குகடன் பணமாக வழங்ப்படாது இவரது பெயரில் கணக்கு திறக்கப்பட்டு பணம் அவரது கணக்கிற்கு வரவு வைக்கப்படும் அதேவேளை அவர்களுக்கு காசோலை புத்தகம் வழங்கப்பட்டு பணம் தேவைப்படும் போது காசோலை வரையவும் அனுமதியளிக்கப்படும்.

கடனாக்கச்செயற்பாடானது, வணிக வங்கியின் ஆரம்ப வைப்பான ரூ.100,000 பணம்வங்கி முறை செயற்பாட்டின் மூலம் மேலும் ரூ400,000 உருவாக்கப்படும் அதேவேளை மொத்த ஒதுக்கு ரூ.100,000 ஆக உருவாக்கப்பட்டு மொத்த வைப்பானது ரூ.500,000 ஆக மாற்றப்படும். இச்செயன்முறை பின்வரும் அட்டவணைமூலம் காட்டப்படுகின்றது.

| வங்கி | புதிய வைப்புக்கள் (ரூ) | புதிதாகக் கொடுக்கப்படும் கடன்கள் (ரூ) | மத்திய வங்கியில் வைக்கப்பட்டிருக்கும் மேலதிக மீதிகள் |
|---|---|---|---|
| எனது வங்கி | 100000 | 80000 | 20000 |
| **A** | 80000 | 64000 | 14000 |
| **B** | 64000 | 51200 | 12800 |
| **C** | 51200 | 40960 | 10240 |
| **D** | …… | ……. | …….. |
| மொத்தம் | 500000 | 400000 | 100000 |

ரூபா 100000 பண வைப்புக்கு எவ்வளவு வைப்பு உருவாக்கப்படும் என நோக்கின்

மொத்த வைப்பு = ரூ 100,000 + 80000 + 64000 + 51200 …………………… = ரூ 500.000

ரூபா 500000ல் மிகுதி வைப்பு வங்கி முறையில் உருவாக்கப்படும்.

வங்கி முறையில் உருவாக்கப்பட்ட வைப்புகள் = ரூ 500, 000 - 100.000

= ரூ 400,000

மேலும் வங்கி முறையால் உருவாக்கப்படும் மொத்த வைப்பு விரிவாக்கம் காசு ஒதுக்குவீதத்தில் (CRR) தங்கியிருக்கும். சிறியளவு காசுக்கு வீதம் பாரியளவு வைப்பு உருவாக்கம் அல்லது கடனுருவாக்கத்திற்கு வழிவகுக்கும். மேலுள்ள 20% காசொதுக்கத்தில் ரூ 100,000 பணவைப்பானது ரூ500,000 வைப்புருவாக்கத்திறகு இட்டுசெல்லும். இவ்வாறு வங்கி முறையின் காசு வைப்பானது மொத்த வைப்பின் பல்மடங்கு விரிவாக்கத்திற்கு இட்டுசெல்லும் காரணியாக வைப்பு அல்லது கடன் பெருக்கி அல்லது பணப்பெருக்கி (5) காணப்படுவதோடு இது காசு ஒதுக்கு வீதத்திலும் தங்கியுள்ளது.

கடன்பெருக்கி அல்லது வைப்புப் பெருக்கி = 1/r ( r= காசு ஒதுக்கு வீதம் CRR)

= 1/20/100

= 5

காசு ஒதுக்கு வீதம் 25% ஆக அதிகரித்தால் = 1/r 1/25/100 = 4

எனவே அதிகரித்த காசொதுக்கு வீதம் குறைவான வைப்புருவாக்கத்திற்கும் குறைவான வீதம் அதிகளவான வைப்புருவாக்கத்திற்கும் வழிவகுக்கும்.

காசொதுக்குவீதம் 10% எனின் வைப்பாக்கப்பெருகக்கி 10 ஆகவும் வைப்புருவபக்கம் 1/10 அளவாகவும் காணப்படும். கணிதரீதியில் பின்வருமாறு கணிப்பிடலாம்.

ரூ.100000 மூலம் உருவாக்கப்பட்ட வைப்பு

1 / r x C (ஆரம்ப வைப்பு)

1/20/100x 100000 = 500000

புதிதாகக் கொடுக்கப்பட்ட கடன்

1 / r x C (ஆரம்பக் கடன்)

1/20/100 x 80000 = ரூ.400000

வங்கியில் வைக்கப்பட்டுள்ள மேலதிக மீதிகள்

1 / r x C (ஆரம்ப ஒதுக்கு)

1/20/100 x 20000 = ரூ.100000

அத்துடன் வங்கி முறையிலுள்ள வணிகவங்கியொன்றிடம் உள்ள காசொதுக்கு 200 பில்லியனும் வைப்புக்கள் 1000 உள்ளதெனக்கொண்டு 12% ஒதுக்குத் தேவையினைப் பேணின் அவ்வங்கி ஆக்கக் கூடிய உச்சகடனின் அளவு ரூபா 80 பில்லியன் ஆகும். (12/100 X 1000 = 120, 200 – 120 = 80)

வணிக வங்கி பணவாக்கம் செய்யவில்லையாயின் நாடொன்றின் பணநிரம்பல் உயர்வலுப்பணத்திற்கு சமப்படும் அதேவேளை பணப்பெருக்கியின் பெறுமதி ஒன்று (1) ஆகவும் காணப்படும். ஆனால் உலகில் எல்லா நாடுகளிலும் பணப்பெருக்கியின் பெறுமதி ஒன்றைவிட உயர்வாகவே காணப்படுகின்றது. ஏனெனில் வணிகவங்கிகள் கேள்விவைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு பணவாக்கம் செய்வதனாலாகும்.

**வணிக வங்கிகளின் கடனாக்கத்தினை தீர்மானிக்கும் காரணிகள்**

1. நாட்டிலுள்ள பணத்தின் அளவு நாணயவெளியீட்டினை மேற்கொள்ளும் தனியுமை அதிகாரம் மத்தியவங்கியிடமே காணப்படுகின்றது. இது நாணய வெளியீட்டினை அதிகரிக்கலாம் அல்லது குறைக்கலாம் அதற்கேற்றவகைளில் கடனுருவாக்கமும் மாறுபடும்.
2. மக்கள் கையில் வைத்திருக்க விரும்பும் பணத்தின் அளவு
3. வங்கி பேணும் குறைந்தபட்ச காசொதுக்கு வீதம்
4. மக்கள் வங்கியில் வைப்பாக வைத்திருக்க விரும்பும் பணத்தின் அளவு.

வங்கித்துறையிலிருந்து வங்கியல்லா நிறுவனங்கள் நோக்கி பணப்பாச்சல் இடம்பெறுவதால் வைப்பாக்கப்பெருக்கியினல் குறிப்பிடப்படும் பணநிரம்பல் விரிவாக்கத்திலிருந்து உண்மையான விரிவாக்கம் வேறுபடுகின்றது. அதாவது மக்கள்

1. பணத்தைப் பணமாக வைத்திருப்பதற்கான மக்களின் விருப்பத்தில் ஏற்படும் அதிகரிப்பு.
2. வங்கிகள் மிகைஓதுக்கினை வைத்திருப்பதற்கு காட்டும் ஆர்வம்.
3. கடனுக்கு போதியளவு கேள்வி இல்லாமை.
4. வட்டி வருவாய் உழைக்கக்கருதி கேள்வி வைப்புக்களில் ஒரு பகுதி சேமிப்பு நிலையான வைப்புக்களாக மாற்றப்படுதல்.

| கடன் தரமிடல் (Credit Ratings) | Fitch Ratings | Moodies |
|---|---|---|
| மீயுயர் முதலீட்டுத்தரம் | AAA | Aaa |
| வலுவான உயர்கடன் தகுதி<br>இடர் மிகக்குறைவு | AA+<br>AA<br>AA- | Aa1<br>Aa2<br>Aa3 |
| வலுவான கடன் தகுதி | A+<br>A<br>A- | A1<br>A2<br>A3 |
| விரும்பத்தக்க கடன் தகுதி | BBB+<br>BBB<br>BBB- | Baa1<br>Baa2<br>Baa3 |
| உப முதலீட்டு வகுப்பு (நடுநிலையாக தீர்மானிக்க வேண்டிய) | BB+<br>BB<br>BB- | Ba1<br>Ba2<br>Ba3 |
| மீயுயர் மட்டத்தில் ஊகிக்க வேண்டியுள்ள | B+<br>B<br>B- | B1<br>B2<br>B3 |
| கடனை மீளச்செலுத்தாத இடரபாயம் கணிசமான அளவிலுள்ள | CCC | Caa |
| கடன் மீள் செலுத்தா வகுப்பு | DDD | C |

## சௌபாக்கிய சுட்டெண் (Prospelty Inder)(SLPI)

- சௌபாக்கிய நிலையை அளவிடுவதற்கு இச் சுட்டெண் பயன்படுத்தப்படும்.
- 2008ம் ஆண்டிலிருந்து இலங்கையில் இச்சுட்டெண் இலங்கை மத்திய வங்கியினால் கணிக்கப்படுகின்றது.
- பிரதேச அபிவிருத்தியினை அளவிடுவதற்கு மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு மேலானதோடு அளவீட்டின் அவசியம் உணரப்பட்டதனால் இச்சுட்டெண் அறிமுகப்படுத்தப்பட்டது.
- பொருளாதார வணிகச்சூழல், மக்கள் வாழ்க்கை நடைமுறை, அடிப்படை உட்கட்டமைப்பு என்பனவற்றின் 20 இணை மாறிகள் இக்கணிப்பீட்டில் உள்ளடக்கப்படும்.
- பொருளாதார வணிகச்சூழலுக்கு 30% மும் மக்களின் வாழ்க்கை நடைமுறைக்கு 45% அடிப்படைக் கட்டமைப்புக்கு 25% நிறையளிக்கப்பட்டுள்ளது.

**மாகாணங்களுக்கான சுபீட்சச் சுட்டெண் 2009 – 2011**

| மாகாணம் | 2009 | | 2010 | | வளர்ச்சி | 2011 | | வளர்ச்சி |
|---|---|---|---|---|---|---|---|---|
| | சுட்டெண் | நிலை | சுட்டெண் | நிலை | | சுட்டெண் | நிலை | |
| மேல் | 72.2 | 1 | 73.5 | 1 | 1.9 | 76.1 | 1 | 3.5 |
| மத்திய | 54.5 | 3 | 56.7 | 3 | 4.1 | 58.3 | 3 | 2.9 |
| தென் | 56.8 | 2 | 57.8 | 2 | 1.8 | 60.0 | 2 | 3.7 |
| வட | 48.9 | 9 | 51.8 | 9 | 5.8 | 55.6 | 6 | 7.5 |
| கிழக்கு | 50.0 | 8 | 53.3 | 6 | 6.7 | 54.6 | 8 | 2.5 |
| வடமேல் | 53.3 | 4 | 55.1 | 4 | 3.4 | 57.1 | 4 | 3.7 |
| வடமத்தி | 50.9 | 7 | 53.3 | 7 | 4.3 | 54.9 | 7 | 3.5 |
| ஊவா | 50.9 | 6 | 52.6 | 8 | 3.4 | 54.5 | 9 | 3.6 |
| சப்பிரகமுவா | 51.8 | 5 | 53.9 | 5 | 4.1 | 55.8 | 5 | 3.6 |
| இலங்கை | 56.5 | | 58.2 | | 3.1 | 60.6 | | 4.1 |

# வறியவர்கள் சார்பான பொருளாதார வளர்ச்சி (Pro Poor growth)

**திருமதி.ஜெயப்பிரபா சுரேஸ்**
**சிரேஸ்ட விரிவுரையாளர்,**
**பொருளியல் துறை,**
**கிழக்குப்பல்கலைக்கழகம்**

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் மிலேனிய அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு துரித மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சியின் அவசியம் உணரப்படுகின்றது. வறுமை ஒழிப்பிற்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் இடையே காணப்படும் தொடர்பினை தெளிவாக விளங்கிக் கொள்வதன் மூலம் வறுமை ஒழிப்புத் தந்திரோபாயங்களில் பொருளாதார வளர்ச்சி கொண்டுள்ள முக்கியத்துவத்தினை அறிந்து கெள்ளலாம். அந்தவகையில் வறியவர்களது நலனில் அதிகரிப்பு ஏற்படுதல் வறுமைக் குறைவு எனலாம். அமார்த்தியா சென் மனித நலனை செயற்பாடு (Functioning) மற்றும் இயலளவு (Capabilities) என்பவற்றைக் கொண்டு வரைவிலக்கணப்படுத்துகிறார். செயற்பாடு என்பது அடைவாகவும் (Achievements) இயலளவு என்பது அதனை அடைவதற்கான திறனாகவும் (ability) கொள்ளப்படுகின்றது. எனவே வறியவர்கள் சார்பான பொருளாதார வளர்ச்சியானது எந்தவொரு பொருளாதார நடவடிக்கையாயினும் வறியவர்களை முழுமையாக அவற்றில் ஈடுபடுத்துவதுடன் அவற்றிலிருந்து நன்மையை பெற்றுக் கொள்வதன் மூலம் பெறப்படுகின்றது.

செல்வந்தர்களோடு ஒப்பிடும் போது வறியவர்கள் தங்களது அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்வதற்கான வளங்களை போதுமானளவு கொண்டிராததால் குறைந்த நலனையே கொண்டு காணப்படுகின்றனர். பொதுவாக சந்தைச் சக்திகளின் ஆதிக்கத்தினால் பொருளாதார வளர்ச்சி செயற்பாட்டின் நன்மையான ஒப்பீட்டளவில் அதிகளவு செல்வந்தர்களையே சென்றடைகின்றது. மேலும் அனேகமான நாடுகளில் அரசானது தெரிந்தோ தெரியாமலோ செல்வந்தர்கள் சார்பான கொள்கைகளையே பின்பற்றி வருகின்றது. இதன் விளைவாக செல்வந்தர்களுக்கும் வறியவர்களுக்கும் இடையிலான இடைவெளி தொடர்ச்சியாக இருந்து கொண்டே வருகின்றது. எனவே ஒட்டுமொத்த சமூகத்தினது நலனை கருத்தில் கொண்டு அரசானது இந்த இடைவெளியை குறைக்கக்கூடிய கொள்கைகளை வகுக்கவேண்டும். இந்த இடிப்படையில் தோற்றம் பெற்ற எண்ணக்கருவாகவே வறியவர்கள் சார்பான பொருளாதார வளர்ச்சி காணப்படுகின்றது.

பொருளாதாரத்தின் வறிய மக்கள் கூட்டத்தின் சராசரி வருமானமானது வறியவர்கள் அல்லாத மக்கள் கூட்டத்தின் வருமானம் அதிகரிக்கும் வேகத்தை விட உயர்வான வேகத்தில் அதிகரித்தல் வறியவர்களுக்குச் சார்பான வளர்ச்சி எனப்படும். அதாவது ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியானது அந்நாட்டு வறுமையைக் குறைக்குமாக இருந்தால் அல்லது வறியவர்கள் கூடிய நன்மையை பெறுவார்களாக இருந்தால் அது வறியவர்கள் சார்பான பொருளாதார வளர்ச்சி எனப்படும். எனவே வறியவர்கள் சார்பான பொருளாதார

வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கு பல்வேறு கொள்கைகளையும் தந்திரோபாயங்களையும் அரசானது வகுக்க வேண்டும். அவ்வாறான கொள்கைகளாக

1. வறியவர்களுக்கு எதிரான நிறுவனரீதியான மற்றும் கொள்ளை ரீதியான பக்கச்சார்புகளை அகற்ற வேண்டும். உதாரணமாக பால், இனம், மற்றும் மதம் சார்பான பேதங்கள் வறியவர்களையே அதிகளவில் பாதிக்கின்றது. இதனால் தொழிற்துறைகளிலும், முறையான ஊழியச் சந்தையிலும் வறியவர்கள் பங்கெடுக்க முடியாமல் போகின்றனர். மற்றும் பொது உட்கட்டமைப்பு வசதிகள் அதிகளவில் நகரப்புறங்களிலே மேற்கொள்ளப்படுதல், தனியுரிமை சந்தைச்சக்திகளது தொழிற்பாடுகளின் காரணமாக அதிக விலைநிர்ணயம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

2. வறியவர்கள் சார்பான நேரடிக் கொள்கைகள்- போதுமானளவு அடிப்படை கல்வி, சுகாதாரம் என்பவற்றிற்கு பொதுச் செலவீட்டினை அதிகரித்தல், கடன் கிடைப்பனவு வசதிகளை அதிகரித்தல், சிறிய மற்றும் நடுத்தர தொழிற்துறைகளை விருத்தி செய்தல், நேரில் வரியை தவிர்த்து நேர்வரியை அறவிடுதல் என்பவற்றைக் குறிப்படலாம்.

இவ்வாறு வறியவர்கள் சார்பான பொருளாதார வளர்ச்சியானது வறியவர்களுக்கு நன்மையாக அமைந்தாலும் ஒட்டு மொத்த பொருளாதாரத்தை நோக்கும் போது பொருளாதார வினைத்திறனின்மையையும் வீழ்ச்சியையும் ஏற்படுத்தும் என்ற கருத்தும் விமர்சனவாதிகளிடையே காணப்படுகின்றது. அதாவது சமத்துவத்திற்கும் வினைதிறனுக்கும் இடையே ஒரு விட்டுக் கொடுப்பு(trade-off) காணப்படுவதாக வாதிடுகின்றனர்.

## Reference

Kakwani and Pernia (2000), What is Pro-Poor Growth?, Asian Development Review, Vol.18, no.1, pp 1-16.

Ravallion, R. & Chen, S. (2003) Measuring Pro-Poor Growt. Economics Letters, 78, 93-99.

# பொருளாதார வளர்ச்சி (Economic Growth)

**முகம்மட் தம்பி. ஸலாமுதீன்**
**உதவி விரிவுரையாளர்,**
**பொருளியல் துறை,**
**கிழக்குப்பல்கலைக்கழகம்.**

பொருளாதார வளர்ச்சி என்பது ஒரு நாட்டிக்கு மிக இன்றியமையாத ஒன்றாகும். இப்பொருளாதார வளர்ச்சியானது ஒரு தனிநபரின் வளர்ச்சியிலிருந்து ஆரம்பமாகிறது. அதாவது தனிமனிதன் தனது வாழ்கையில் சகலவசதிகளுடனும் வாழ்வானாயின் அது பொருளாதார வளர்ச்சிக்கு சாத்தியமான ஒரு பங்களிப்பினை ஏற்படுத்தி கொடுக்கும்.

இவ் பொருளாதார வளர்ச்சியானது பின்வருமாறு வரைவிலக்கணப் படுத்தப்படுகிறது.

நாட்டின் உற்பத்தியில் ஏற்படும் அதிகரிப்பனுடாக மொத்த மெய்(தேசிய/உள்நாட்டு) உற்பத்தியில் நீண்ட காலத்தில் ஏற்படும் தொடர்ச்சியான அதிகரிப்பு பொருளாதார வளர்ச்சி என குறிப்பிடப்படுகின்றது. அதாவது தொழிநுட்ப மாற்றங்களுடன் தொடர்புடையதாக இது காணப்படுகின்றது. உதாரணமாக அமெரிக்காவில் இணைய, தொழிநுட்ப அறிமுகம் அமெரிக்காவுடைய சகல துறைகளிலும் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தியது. பொருளாதார வளர்ச்சியானது உற்பத்தி திறனில் அதிகரிப்பு ஏற்படுவது மட்டுமல்ல மக்களுடைய வாழ்கை தரத்தில் ஏற்படும் முன்னேற்றத்தையும் குறிப்பிடுகின்றது.

பொருளாதார வளர்ச்சி என்பது நாட்டின் உற்பத்தி இயலளவில் ஏற்படும் அதிகரிப்பினைக் குறிப்பதோடு, பொருளாதார வளர்ச்சியானது உற்பத்தி சாத்திய வளையியின் வலப்புற நகர்வின்முலம் (X1-Y1)காட்டப்படும்.




எனவே மேலுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் பொருளாதா வளர்ச்சி என்பது "நாட்டின் தலாமொத்த உள்நாட்டு உற்பத்தியில் (Real GDP Per Capita) நீண்ட காலத்தில் ஏற்படும் தொடரச்சியான அதிகரிப்பு" ஆகும்.

கோட்பாட்டு ரீதியில் நோக்குமிடத்து பொருளாதார வளர்ச்சியை உற்பத்தி இயலளவில் அல்லது சாத்திய வெளியீட்டில் ஏற்படும் ஒரு விரிவாக்கம் என வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது.

பொருளாதார வளர்ச்சியை மூன்று முக்கிய பகுதிகளில் உள்ளடக்கலாம்.

1. நிலையான வளர்ச்சி, உயர்ந்த வேலைவாய்ப்பு, பணவீக்க கட்டுப்பாடு, பரந்த பொருளாதார இலக்குகளை சந்திப்பதற்கு காரணங்கள் கொள்கைகளை மேற்கொள்ளுதல்.
2. அரசாங்கத்தின் கொள்கைகள் திட்டங்கள் என்பன. கட்டிடங்கள், நெடுஞ்சாலைகள், பூங்காக்கள், மருத்துவ சேவைகள், வளங்கள் போன்ற துறைகளில் காணப்படல்.
3. அரசாங்கத்தின் கொள்கைகள் திட்டங்கள் குறிப்பிட்ட விசேட முயற்சிகள் மூலமாக வணிக காலநிலையை மேம்படுத்துதல், வணிகநிதி சந்தை வளர்ச்சி, வணிகத்தை தக்கவைத்திருத்தல் மற்றும் விரிவாக்கம், தொழிநுட்பப்பரிமாற்றம், போன்ற துறைகளில் காணப்படல்.

பொருளாதார வளர்ச்சியானது பின்வரும் இரு முறைகளில் அளவிடப்படுகிறது.

1.குறித்த காலப்பகுதி ஒன்றில் மெய்த்தேசிய உற்பத்தி (GNP) அல்லது தேறிய தேசிய உற்பத்தி (NNP)யில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு (சனத்தொகை அதிகரிப்பை விட தலைக்குரிய மொத்த தேசிய உற்பத்தியில் ஏற்படும் அதிகரிப்பு).

2. குறித்த காலப்பகுதியொன்றில் தலைக்குரிய மொத்த தேசிய உற்பத்தி அல்லது தேறிய தேசிய உற்பத்தியில் ஏற்படும் அதிகரிப்பை குறிப்பிடலாம்.

பொருளாதார வளர்ச்சியானது மெய்தேசிய உற்பத்தி (GNP) அதிகரிப்பு மூலமும் அளவிடப்படுகின்றபோதும், பரந்தளவில் மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி(GDP) அதிகரிப்பு மூலமே அளவிடப்படுகிறது.

எனினும் மிகப் பயனுள்ளதும்/பொருத்தமானதுமான முறை மெய்தலா உற்பத்தி அதிகரிப்பு மூலம் அளவிடுவதாகும். பொருளாதார வளர்சியானது பின்வரும் முறைகள் மூலம் அளவிடப்படுகின்றது.

1.வருடாந்த பொருளாதார வளர்ச்சி வீதம்.

$$= \frac{\text{குறிப்பிட்ட வருட மெய் மொ.உ.உ.அதிகரிப்பு}}{\text{முந்தியவருட மெய் மொ.உ.உ}} \times 100$$

இது குறுங்கால வளர்ச்சி வீத அளவீடாகும்.

2. வருடாந்த சராசரி பொருளாதார வளர்ச்சி வீதம்

$$= \frac{\text{குறிப்பிட்ட கால இறுதி வருட மெய் மொ.உ.உ} - \text{குறிப்பிட்ட கால ஆரம்ப வருட மெய் மொ.உ.உ}}{\text{ஆரம்ப வருட மெய் மொ.உ.உ} \times \text{வருட எண்ணிக்கை}} \times 100$$

இது நீண்டகால வளர்ச்சியை அளவிடுவதை இலகுவாக்குவதன் பொருட்டு குறைந்த பட்சம் 10 வருடங்களையேனும் கருத்திகொள்ள வேண்டும்.

**பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் காரணிகள்.**

1. உற்பத்தி காரணிகளின் அளவு (உபயோகம்) அதிகரித்தல்.

- பௌதீக முலதனம் (முதலீட்டு மட்டம்) Physical Capital அதிகரித்தல்
- இயற்கை வளப் பயன்பாடு அதிகரித்தல்-புதிய வளங்கள் கண்டுபிடித்தல் உ+ம் பெற்றோலியம்.
- ஊழியப்படை எண்ணிக்கை அதிகரித்தல்.

2. உற்பத்தி காரணிகளின் உற்பத்தித்திறன் ( விளைதிறன்)/ தரத்தை அதிகரித்தல்.

இதை ஏற்படுத்தும் அம்சங்களாவன:

- தொழிநுட்ப முன்னேற்றம்-புதிய உற்பத்தி,புதிய உற்பத்தி முறை
- முகாமைத்துவ மேம்பாடு
- மனித மூலதனம் (Human Capital)/மனிதத்திறன்கள் அதிகரித்தல்
  கல்வி, பயிற்சிமுலம் அதிகரித்தல்.

4. உற்பத்தி அமைப்பு மாற்றம்- குறைந்த உற்பத்தி திறனிலிருந்து (உ+ம் விவசாயத்துறை) உயர்ந்த உற்பத்தி திறனுக்கு (உ+ம் கைத்தொழில்துறை) வள ஒதுக்கீட்டை மாற்றுதல்.

4.வெளிநாட்டு வர்த்தக,பொருளாதளர தொடர்புகள் புதியசந்தை வாய்ப்புகள்.

5.பொருளாதார,சமுக,அரசியல் உறுதிப்பாடும், செயற்திறன் மிக்க அரச கொள்கைகளும்.

**பொருளாதார வளர்ச்சியினால் ஏற்படும் நன்மைகள்**

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியானது தனிநபர் வருமான உயர்வால் வாழ்கைத்தரம் முன்னேற்றமடைவதுடன், வறுமை குறைவடையவும் வழிவகுக்கும், அத்துடன் தொழிலின்மை குறைவடையவும், சுற்றாடல் பாதுகாப்பு முன்னேற்றமடையும், வியாபார நம்பகத்தன்மையும் முயற்சியாளர் இலாபங்களும் அதிகரிக்கவும், அரச பொதுக்கடன்கள் குறைவடையவும், வழிவகுப்பதோடு பொதுச்சேவைகள் முன்னேற்றமடைந்து பாதீட்டுப் பற்றாக்குறைவடையவும் சென்மதி நிலுவை உறுதிப்பாடு ஏற்படவும் வழிவகுக்கும்.

**பொருளாதார வளர்ச்சியினால் ஏற்படும் செலவுகள்.**

பொருளாதார வளர்ச்சியால் ஏற்படும் செலவுகளை நோக்கின் வருமான மற்றும் செல்வ பரப்பில் ஏற்றத்தாழ்வுகள் உருவாகுதல், ஊழிய வேலையின்மை ஏற்படுத்துதல், பிரதேச ரீதியான வேறுபாடுகள் உருவாகுதல், பேண்தகு அபிவிருத்திக்குப் பாதிப்பு ஏற்படல், பணவீக்கம் ஏற்படும் ஏதுநிலை உருவாகுதல், அமையச்செலவுகள் ஏற்படல் , உற்பத்தியும் நுகர்வும் அதிகரிப்பதனால் சூழல் பாதிப்புக்கள் ஏற்படல், தொழிநுட்ப மாற்றங்கள் ஊழியர் மத்தியில் நிச்சயமற்ற தன்மையையும் அச்சத்தினையும் ஏற்படுத்துவதற்கு வழிவகுத்தல் என்பன காணப்படுகின்றன.

**பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள்**

பொதுவாக பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளாக சேமிப்பு முதலீட்டை ஊக்குவித்தல், வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஊக்குவித்தல், மனித மூலதனத்தை அதிகரித்தல், வர்த்தகத்தை தாராளமயமாக்கல், வரிச் சீர்திருத்தங்களை மேற்கொள்ளல், அரச கட்டுபாடுகளை தளர்த்தல், ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஊக்குவித்தல் என்பன காணப்படுகின்றன.

**இலங்கையின் பொருளாதார வளர்ச்சி - தற்காலப் போக்கு**

இலங்கையுடைய பொருளாதார வளர்ச்சியை பொறுத்த வரையில் 21ம் நுற்றாண்டு முதல் காலண்டில் குறிப்பீடத்தக்களவு பொருளாதார அபிவிருத்தி காணப்பட்டன. கடந்த மூன்று தசாப்த காலம் உள்ளுர்யுத்தம், இயற்கை அழிவுகள் காரணமாகவும் இலங்கை பொருளாதாரம் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகியிருந்தன. யுத்த காலப்பகுதிகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சி வீதம் சராசரியாக 5% மாக காணப்பட்டன.

இலங்கையில் 2010 ஆம் ஆண்டில் 8% வளர்ச்சியும் 2011 ஆம் ஆண்டில் 8.3% வளர்ச்சியும் 2012 7.2% வளர்ச்சி காணப்பட்டதுடன் 2013 ஆம் ஆண்டில் 7.9% எதிர்வு கூறப்பட்டுள்ளது. இவ் வளர்சிக்கான காரணங்களாக மிகவும் உதவி செய்த பகுதிகளாக பொறுளாதார அபிவிருத்திக்காக அரசாங்கத்தின் செலவீனம், விவசாய உற்பத்தி, சுற்றுலா, புடவை உற்பத்தி, தேயிலை ஏற்றுமதி வெளிநாட்டு நாணய மாற்று விகிதம் (90% மான நாணய மாற்று விகித வறுமானம் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து பெறப்படுகிறது).

உலக வங்கியின் Global Economic Prospects Report (June 2011) படி இந்தியாவும் இலங்கையும் கிழக்காசியாவில் பொருளாதார வளர்சிக்கு வழி காட்டும் அளவுக்கு அதனுடைய GDP 7.9% வளர்ச்சியை 2013 இல் அடையும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

**பணப்பெருக்கிச் செயற்பாடு**

